# பள்ளி வசதி

**தலைப்பு: நேதாஜி சுபாஷ் சந்திர போஸ் உண்டு உறைவிடப் பள்ளிகள் (NSCBAV)**

**நோக்கங்கள்:**

தமிழகத்தில் உள்ள அனைத்து குடியிருப்புகளிலும் உள்ள குழந்தைகளுக்கு பள்ளி வசதியினை உறுதி செய்வது ஒருங்கிணைந்த பள்ளிக் கல்வியின் முக்கிய நோக்கங்களில் ஒன்றாகும். அருகாமைப் பள்ளி விதி களின்படி, மாநிலத்தில் அனைத்து குடியிருப்புகளிலும் பள்ளிகள் அமைத்தலில் சாத்தியமில்லாத சில பகுதிகள் உள்ளன. இந்த பள்ளி வசதியில்லாத குடியிருப்புகள் பெரும்பாலும் தொலைதூர/ மலைப்பாங்கான/ காடு பகுதிகளில் அமைந்துள்ளன. அரு காமைப் பள்ளியின் தொலைவு, முறையான சாலை வசதி யின்மை, மற்றும் வன விலங்குகளின் தாக்குதலுக்கு உள்ளாகும் அபாயம் போன்ற காரணங்களால் , இக்குடியிருப்புகளில் உள்ள குழந்தைகள் இடைநிற்கின்றனர். இக்குடியிருப்பில் உள்ள குழந்தைகளுக்கு பள்ளிக்கு வந்து செல்ல போக்குவரத்து/பாதுகாவலர் வசதி வழங்க இயலாத நிலை உள்ளது. எனவே , ஒருங்கிணைந்த பள்ளிக் கல்வி கட்டமைப்பின்படி , இத்தகு பள்ளி வசதியில்லாத குடியிருப்புகளில் உள்ள குழந்தைகள் பள்ளிக்கு அணுகுவதற்கு உண்டு உறைவிடப் பள்ளி/விடுதி வசதிகளை வழங்குவது அவசியம் ஆகும். நேதாஜி சுபாஷ் சந்திர போஸ் உண்டு உறைவிடப் பள்ளிகளின் முதன்மை இலக்குகள் பின்வருமாறு:

- பள்ளி வசதியில்லாத குடியிருப்புகளில் குறிப்பாக தொலைதூர/ மலைப்பாங்கான/ காடு பகுதிகளில் உள்ள குழந்தைகளின் இடைநிற்றலை குறைத்தல்
- மாணவர்களின் சேர்க்கையினை அதிகரித்தல்
- பள்ளி அணுகள் விகிதத்தை மேம்படுத்துதல்
- குழந்தைகள் தேர்ச்சி பெற்று அடுத்த வகுப்புகளுக்கு இடைநிற்றலின்றி செல்லுதல்
- தக்கவைத்தல் விகிதத்தை மேம்படுத்துதல்

தமிழகத்தில் தொடக்க மற்றும் உயர் தொடக்க நிலையில் 9 உண்டு உறைவிடப்பள்ளிகளும் மற்றும் இடைநிலை நிலையில் 1 விடுதியும் 9 மாவட்டங்களில் அமைந்துள்ளன. அதன் அமைவிடங்கள் பின்வருமாறு:

| வ. எண் | மாவட்டம் | ஒன்றியம் | உண்டு உறைவிடப்பள்ளி/ விடுதி அமைவிடம் | அனுமதிக்கப்பட்ட மாணவ/ மாணவியர் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| மாதிரி I (100 மாணவ/ மாணவியர்) | | | | |
| 1. | கோயமுத்தூர் | வால்பாறை | வால்பாறை | 100 |
| 2 | தருமபுரி | பென்னாகரம் | பென்னாகரம் | 100 |
| 3 | கிருஷ்னகிரி | சூளகிரி | அத்திமுகம் | 100 |
| 4 | கிருஷ்னகிரி | கெலமங்களம் | தென்கனிகோட்டை | 100 |
| 5 | கிருஷ்னகிரி | தளி | கக்கதாசம் | 100 |
| 6 | நாகப்பட்டினம் | மயிலாடுதுறை | பல்லவராயன்பேட்டை | 100 |
| 7 | பெரம்பலூர் | ஆலத்துரர் | மலையப்பநகர் | 100 |
| 8 | நீலகிரி | கூடலூர் | வட்டக்கொல்லி | 100 |
| 9 | நீலகிரி | கூடலூர் | கோழிக்கொல்லி | 100 |
| 10 | விழுப்புரம் | கள்ளகுறிச்சி | எடுத்தவாய்நத்தம் | 100 |
| **மொத்தம்** | | | | 1000 |
| மாதிரி II (50 மாணவ/ மாணவியர்) | | | | |
| 11 | கோயமுத்தூர் | SS குளம் | ஒண்டிபுதூர் | 50 |
| 12 | திருப்பூர் | அவிநாசி | அவிநாசி | 50 |
| 13 | திருநெல்வேலி | வள்ளியூர் | வள்ளியூர் | 50 |
| **மொத்தம்** | | | | 150 |
| 14 | கோயமுத்தூர் | வால்பாறை | வால்பாறை - விடுதி | **50** |
| **மொத்தம் (உண்டு உறைவிடப் பள்ளிகள்** & விடுதி) | | | | 1200 |

**<u>செயல்படுத்தும் முறைகள்</u>**

ஒவ்வொரு ஆண்டும் கல்வியாண்டு தொடங்கும் முன் , உண்டு உறைவிடப்பள்ளிகளின் சீரான செயல்பாட்டிற்கான நிலையான வழிகாட்டு நெறிமுறைகள் ஒருங்கிணைந்த பள்ளிக் கல்வியின் மாநிலத் திட்ட இயக்கத்தில் உருவாக்கப்பட்டு அனைத்து பள்ளிகளுக்கும் வழங்கப்படுகிறது. அவைகளாவன:

- அரசு சாரா தொண்டு நிறுவனங்கள் தெரிவு செய்தலுக்கான நடைமுறைகள்
- ஆசிரியர் மற்றும் ஆசிரியர் அல்லாத பணியாளர்கள் நியமனம்

- குழந்தைகளின் சேர்க்கை மற்றும் தக்கவைத்தல்
- குழந்தைகளுக்கு பாதுகாப்பான சூழல் , பாதுகாப்பான குடிநீர் மற்றும் சுகாதாரமான கழிப்பறை வசதிகள் வழங்குதல்
- ஆசிரியர்களின் கடமைகள்,
- கற்பித்தல் நடவடிக்கைகள் (கல்வி மற்றும் கல்வி சாரா)
- நூலக செயல்பாடுகள்
- கல்வி பொருட்கள் வழங்குதல்
- வினாடி வினா நிகழ்ச்சிகள் மற்றும் குழு செயல்பாடுகள் , தினசரி செயல்பாடுகளுக்கான அட்டவணை
- ஆரம்ப சுகாதார நிலையத்துடன் ஒருங்கிணைந்து சுகாதார பரிசோதனைகளை நடத்துதல்
- பதிவேடுகளை பராமரித்தல்
- தேசிய வருவாய்வழி மற்றும் திறன் தேர்வுக்கான பயிற்சி
- VIIIம் வகுப்பு தேர்ச்சி பெற்ற குழந்தைகளை IXம் வகுப்பு சேர்த்தல்
- ஆவணப்படுத்தல், ஒன்றிய, மாவட்டம் மற்றும் மாநில அளவில் அனைத்து நடவடிக்கைகளையும் கண்காணித்தல் மற்றும் மேற்பார்வை செய்தல்

மேற்கூறியவற்றைத் தவிர , உண்டு உறைவிடப்பள்ளிகள் மற்றும்விடுதிகளுக்கான/ மத்திய திட்ட ஒப்புதல் குழுவின் நிதி ஒதுக்கீடு மற்றும் கீழ்காணும் செயல்பாடுகளுக்கு நிதியைப் பயன்படுத்துவதற்கான விரிவான வழிகாட்டுதல்கள் வழங்கப்படுகிறது.

- குழந்தைகளுக்கு உணவு/தங்குமிடம் வழங்குதல்,
- குழந்தைகளுக்கு உதவித்தொகை
- ஆசிரியர் மற்றும் ஆசிரியர் அல்லாத ஊழியர்களுக்கு ஊதியம்,
- உண்டு உறைவிடப்பள்ளிகள்/விடுதிகளை பராமரித்தல்,

- குழந்தைகளுக்கு குறிப்பிட்ட திறன் பயிற்சி வழங்குதல்,
- VIII/ XII வகுப்பு தேர்ச்சி பெற்ற குழந்தைகளின் காரணமாக ஏற்படும் காலியிடங்களை நிரப்ப ஆயத்த முகாம்கள் நடத்துதல்
- கற்றல் கற்பித்தல் பொருட்கள் தயாரித்தல்
- குழந்தைகளுக்கு தற்காப்பு பயிற்சி வழங்குதல் மற்றும்
- பெற்றோர் ஆசிரியர் கூட்டம் நடத்துதல்

**எதிர்பார்க்கப்படும்விளைவுகள்:**

- பள்ளி வசதியில்லாத குடியிருப்புகளில் குறிப்பாக தொலைதூர/மலைப்பாங்கான/ வனப்பகுதிகளில் இடைநிற்கும் குழந்தைகளுக்கு உண்டு உறைவிட பள்ளி/விடுதி வசதியினை வழங்குதல்.
- உண்டு உறைவிடப் பள்ளி/விடுதி வசதியை வழங்குவதன் மூலம் புவியியல் நிலைமைகள் காரணமாக ஏற்படும் பள்ளி வசதிக்கான தடையை நீக்குதல்
- பள்ளி வசதியில்லாத குடியிருப்புகளில் இடைநிற்றல்களைக் குறைத்தல்
- தொலைதூர/மலைப்பாங்கான/காடு பகுதிகளில் அனைத்து நிலைகளிலும் வருகை விகிதம் அதிகரிப்பு
- அனைத்து நிலைகளிலும் தொலைதூரப் பகுதிகளில் உள்ள குழந்தைகளைத் பள்ளிகளில் தக்கவைத்தல்
- மாணவர்களின் அடைவு நிலையினை உயர்த்துதல்

**முக்கிய செயல்திறன் குறிகாட்டிகள் (KPIs):**

- தொடக்க மற்றும் இடைநிலையில் மாணவர்களின் சேர்க்கையினை (GER & NER) மேம்படுத்துதல்

➢ தொடக்க மற்றும் இடைநிலையில் மாணவர்களின் பள்ளி அணுகல் விகிதத்தினை (GAR) மேம்படுத்துதல்

➢ மாணவர்கள் தேர்ச்சி பெற்று அடுத்த வகுப்புகளுக்கு இடைநிற்றலின்றி செல்லுதல் மற்றும் தக்கவைத்தல் (Transition rate)விகிதத்தினை மேம்படுத்துதல்

➢ தொடக்க மற்றும் மேல்நிலை நிலைகளில் மாணவர்களின் தக்க வைத்தல் விகிதத்தினை (retention rate) மேம்படுத்துதல்

**நிதி ஒதுக்கீடு** -2021-22

அனைத்து உண்டு உறைவிடப்பள்ளிகள்/விடுதிகளுக்கு நிதியானது தொடரும் மற்றும் தொடரா தலைப்புகளின் கீழ் ஒதுக்கீடு செய்யப்படுகிறது.

| வ. எண் | செயல்பாடுகள் | நிதி ஒதுக்கீடு (தொடரா) (ரூ. இலட்சத்தில்) | நிதி ஒதுக்கீடு (தொடரும்) (ரூ. இலட்சத்தில்) | மொத்தம் (ரூ. இலட்சத்தில்) |
|---|---|---|---|---|
| 1 | உண்டு உறைவிடப்பள்ளிகள் - தொடரும் (கடந்த ஆண்டு) (மாதிரி II ) (தொடக்க நிலை) | 2 | 98.61 | 100.61 |
| 2 | உண்டு உறைவிடப்பள்ளிகள் - தொடரும் ((கடந்த ஆண்டு) (மாதிரி I) (தொடக்க நிலை) | 18 | 482 | 500.00 |
| | **மொத்தம்** | **20** | **580.61** | **600.61** |
| 3 | உண்டு உறைவிட விடுதி - தொடரும் (கடந்த ஆண்டு) (இடைநிலை) | 1 | 16.37 | 17.33 |
| **மொத்தம்** | | **21** | **596.98** | **617.94** |

**புகைப்படங்கள்**



உண்டு உறைவிடப் பள்ளி- கிருஷ்ணகிரி மாவட்டம்




உண்டு உறைவிடப் பள்ளி- கோயமுத்தூர் மாவட்டம்